மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு கடன் வசதி செய்து கொடுப்பதற்காகத்தான் அந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. ஆனால் ஆதிதிராவிட நலத்துறை மூலமாக நிதி ஒதுக்கப்பட்டு, விவசாயத்துறைக்கு அனுப்பப்பட்டு விவசாயத் துறையிலிருக்கிற அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு அங்கே நலத்திட்டங்கள் தரப்படுகின்றன. அதேபோல் கால்நடை பராமரிப்புத் துறைக்கும் அவர்கள் மூலமாக கோப்புகள் எங்களுக்கு அனுப்பப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதேபோல, தாட்கோ நிறுவனத்தின் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்காக சம்மந்தப்பட்ட, தொடர்புடைய ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இ.ஓ.ஏ.டி. என்ற அலுவலர் மூலமாக கோப்புகள் தாட்கோ டி.எம்.-க்கு அனுப்பப்பட்டு நன்றாக, நாம் அதிக அளவில் செயல்பட்டிருக்கிறோம். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் கவர்னர் உரைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கின்றபோது இதுபற்றித் தெரிவித்தார்கள். சிறப்பாக நடக்கின்ற தாட்கோ நிறுவனத்தை நாம் குறைத்து எடை போடக்கூடாது. இப்போது நடக்கின்ற இந்த நடைமுறையே சிறந்தது என்று கருதி மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 117, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

117--

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் தொழிற்பேட்டை

**36915--திருமதி கவிநிலவு தர்மராஜ்:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் தொழிற் பேட்டையை மொடக்குறிச்சி ஒன்றியத்தில் அமைக்க அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இல்லை".

1996 பிப்ரவரி 23]

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சித் தொகுதியிலே ஆதிதிராவிட மக்கள் *30%*க்கும் மேலாக இருக்கிற காரணத்தால், ஆதிதிராவிட மக்களை ஒரு முதலாளி அந்தஸ்துக்கு, தொழிற்பேட்டைகளில் உரிமையாளர்கள் என்ற அந்தஸ்துக்கு உயர்த்தி, ஆதிதிராவிட மக்களுடைய அரும்பெரும் தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய உன்னதமான ஆட்சியிலே, ஆதிதிராவிடர்களுக்கென்று அரசால் சிபாரிசு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்ட ஆதிதிராவிட தொழிற்பேட்டையை, வேலையில்லாமல் இருக்கும் தொழிலாள பாட்டாளி மக்களை அதிகமாகக் கொண்டிருக்கும் மொடக்குறிச்சித் தொகுதிக்கு மாற்றியமைப்பீர்களேயானால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய எண்ணத்தை நினைத்த மாத்திரத்திலேயே நடத்தி முடிக்கக்கூடிய ஆற்றல்படைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய தொகுதி மக்களுக்கு நல்லது செய்தது போலவும் ஆகும். இந்த நாட்டு மக்களுக்கும் அதிகப்படியான அளவிலே ஆதிதிராவிடர்களைக் கொண்டிருக்கிற தொகுதி மொடக்குறிச்சி என்பதை விளக்கக்கூடிய விதத்திலேயும் அது அமையும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, இல்லை என்ற பதிலை மீண்டும் மறு பரிசீலனை செய்து மொடக்குறிச்சித் தொகுதியிலே அந்தத் தொழிற்பேட்டையைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் ஆவன செயவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் ஈங்கூர் என்ற இடத்தில் பெருந்துறைக்கு அருகிலே தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி வளர்ச்சி நிறுவனத்திலிருந்து *150.35* ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை *2* கோடியே *3* இலட்சம் ரூபாய் செலவில் குத்தகைக்குப் பெற்று *200* தொழிற்கூட அலகுகள் நிறுவ அரசு ஆணை வெளியிட்டுவிட்டது. அந்தத் தொழிற்பேட்டைக்கு நிலம் மேம்படுத்துதல், சாலைகள் அமைத்தல், கழிவுநீர் அகற்றுதல், தண்ணீர் வசதி போன்றவற்றுக்காக ஒரு கோடியே *82* இலட்சத்து *50* ஆயிரம் ரூபாய் ஒதுக்க செலவு மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், *200* தொழிற்கூட அலகுகள் கட்டுவதற்கு *16* கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கொண்டு வேலைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகிற இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்கு தொழிற்பேட்டையை மாற்றித்தரவேண்டும்

என்ற கோரிக்கைக்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *118*, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

118--

இறால் வளர்ப்புப் பயிற்சி அளித்தல்

84880 திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம் விவசாயிகளுக்கு இறால் வளர்ப்புப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்ட விவசாயிகளுக்கு இறால் வளர்ப்புப் பயிற்சி அளிக்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் *11–25*

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: வடாற்காடு–அம்பேத்கார் மாவட்டம் வானம் பார்த்த பூமியாக இருக்கிறது. மழை பெய்தால்தான் விவசாயம் செய்ய முடியும். அதனால், குளம், குட்டைகள் வெட்டி இறால் வளர்க்க விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பி.எப்.டி.ஏ.' என்று சொல்லக்கூடிய கடல் இறால் வளர்க்கிற உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் 5 மாவட்டங்களில் கடல் இறால் எப்படியெல்லாம் வளர்க்கலாம் என்கிற ஒரு பயிற்சி அந்த நிறுவனத்தின் மூலமாக அளிக்கப்படுகிறது. அதே போன்று நன்னீர் இறால் வளர்ப்பதற்கு 'மெரைன் பிராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி' என்ற மத்திய அரசின் நிறுவனம் மூலமாக மண்டல அலுவலகத்தின் மூலமாக நன்னீர் இறால் வளர்ப்பதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு பயிற்சித் தொகையும் மற்றும் பயிற்சிக்கு வேண்டிய உதவியும் இந்த நிறுவனத்தின் மூலமாக அளிக்கப்படுகிறது. தேவையான பயிற்சியை